**ஜனவரி - 26**

**"நீங்கள் உபவாசிக்கும்போது மாயக்காரரைப்போல முகவாடலாய் இராதேயுங்கள்." - மத் 6:16**

தேவனுடைய ஜனங்களுக்கு உபவாசித்தல் குறிப்பாக சில சமயங்களில் அதிகம் தேவைப்படுகிறது. ஆவியில் அனலின்றி சோர்ந்து போகின்ற காலங்களில் இது தேவைப்படுகிறது. உலகப்பிரகாரமாக கடும் சோதனைகளில் சிக்குண்டு தவிக்கையில் இது தேவைப்படுகிறது. மாம்சத்திற்கும் பிசாசிற்கும் இடையே அகப்பட்டு சோதிக்கப்படும் வேளைகளிலும் உபவாசித்தல் தேவைப்படுகிறது. ஏனெனில் இப்படிச் செய்யும்போது நமக்குள் இருக்கிற சரீர பெலனையும் சக்தியையும் எல்லா வழிகளிலும் ஒரு கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர உதவும். எப்பொழுதாவது உபவாசம் இருப்பது பெரும்பாலான கிறிஸ்தவர்களுக்கு இது அதிக உதவியாக இருக்கும் என நாங்கள் விசுவாசிக்கிறோம். மிக எளிமையான உணவை அருந்தலாம் அல்லது முற்றிலுமாக உணவை ஒதுக்கி வைக்கலாம். ஆனால் இவ்வாறு உபவாசிக்கின்றதைப் பிறர் காணும்படி செய்யலாகாது. அல்லது நாம் பரிசுத்தவான்கள் என்கின்ற எண்ணத்தை மனதில் உருவாக்கிக் கொண்டு அவ்வாறு கடைப்பிடிப்பதும் கூடாது. இப்படிச் செய்வது நமக்குத் தீங்கு விளைவிக்கும். மேட்டிமையும், அகங்காரமும் நம்மில் வளரும். மாயக்காரரைப்போல் ஆவோம். நாம் எந்த நல்ல நோக்கத்தோடு உபவாசிக்க, நம்மையே அடக்கிக்கொள்ள பிரயத்தனப்பட்டோமோ அத்தனையும் விருதாவாகப் போகும். மேட்டிமையும் மாயையும் நம்மை மேற்கொள்ளும். **- Z '98, 45 (R 2260).**

சிறந்த தெய்வ பக்தர்கள் என தங்கள் உடல் வருத்தி மாயத்தோற்றம் செய்பவர்கள், மக்கள் காணும் பொருட்டு ஜெபங்கள் செய்து அன்னதானம் செய்பவர்களைப் பார்க்கிலும் அதிக மோசமானவர்களாகி விடுகிறார்கள். ஒரு கிறிஸ்தவன் உபவாசிக்கிறான் என்றால், தன்னையே வெறுப்பதற்குத்தான் அப்படிச் செய்ய வேண்டும். எனவே நாங்கள் உபவாசிக்கும்போது மனமகிழ்ச்சியுடனும் நன்றியுடனும் அதனைக் கடைப்பிடித்தல் வேண்டும். தேவனுடைய மகிமைக்கு தனக்குக் கிடைக்கும் ஓர் அரிய வாய்ப்பாகக் கருத வேண்டும். இக்காரியத்தின் மூலம் தங்களைத் தாங்களே எந்த அளவிற்கு வெறுக்கிறார்களோ அந்த அளவிற்கு அவர்களில் ஆவியின் கனிகள் வெளிப்படுகிறது. விசுவாசம், நம்பிக்கை, அன்பு, கீழ்ப்படிதல் ஆகிய நற்பண்புகள், மேல்நோக்கி வளர்கின்றது. இது அவர்கள் தேவனுக்கு ஏறெடுக்கும் ஜெபங்கள் மூலம் வளர்கின்றது. **- P '32, 198.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

ஏசா 58:5; உபா 12:18; 1சாமு 2:1; 1நாளா 16:27; எஸ்றா 6:22; நெகே 8:10,12;12:43; சங் 4:7; 5:11; 16:5-11; 30:11; 68:3; 89:15,16; 97:11,12; 126:5,6; லூக் 6:22,23; யோவா 15:11; 16:20,22,24,33; அப் 16:25,34; 2கொரி 6:10; 7:4; 8:2;12:10; எபி 10:34; யாக் 1:2; 1பேது 4:13.

**கோபுர வாசிப்பு :** Z '11, 222 (R 4858).

**வினாக்கள் :** இந்த வாரத்தில் எனது சுயவெறுப்புகளுக்கு மத்தியில் மகிழ்ச்சியாயிருந்தேனா? அல்லது கவலையாயிருந்தேனா? ஏன்? பலன் என்ன?